RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-22242

# இறையன்பு படைப்புகளில் வழிபாட்டு மரபுகள்

ச. விஜயலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-600117, தமிழ்நாடு, இந்தியா

# Liturgical Traditions in the Works of Iraianbu

S. Vijilakshmi [a, *]

[a] Department of Tamil, Vels Institute of Science Technology and Advanced Studies, Chennai- 600117, Tamil Nadu, India

* Corresponding Author: vijilakshmiviji921@gmail.com

Received: 21.09.2022
Revised: 03-11-2022
Accepted: 07-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

We call the Lord in many names such as God, Deity, Lord, and Bhagavan and so on. The thought of God didn't appeared today or yesterday, it appeared two thousand years ago. At earlier stage man worshipped nature as God. They considered Sun, Moon, wind, fire, tree, plant and vine as God. Man realized that there is a power higher than himself in this world and as a result they began to worship something as God. Everything that man feared became God in the beginning. Man regarded everything beyond his control as God. Then many gods like Shiva, Thirumal, Brahman, and Murugan appeared. They started worshiping the idols. Denoting the state of attaining God only after death. Alvars and the Nayanmars also followed this path. They believed the benefit of birth is to reach God

**Keywords:** God, Deity, Lord, Nayanmars, Liturgical Traditions

## முன்னுரை

இறைவனைக் கடவுள், தெய்வம், ஆண்டவன், பகவான் என பல சொற்களில் நாம் அழைக்கின்றோம். இறைப்பற்றிய சிந்தனை இன்றோ, நேற்றோ தோன்றியது அன்று. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இச்சிந்தனை மனிதனுக்குத் தோன்றியிருக்கின்றது. ஆரம்பகாலத்தில் மனிதன் இயற்கையைத் தான் கடவுளாக வணங்கினான். சூரியன், சந்திரன், காற்று, நெருப்பு, மரம், செடி, கொடி என அனைத்தும் கடவுளாயின. தன்னைவிட உயர்ந்த சக்தி இந்த உலகத்தில் உண்டு என்பதை மனிதன் உணர்ந்து கொண்டான். தன்னால் கட்டுப்படுத்த முடியாதவற்றை எல்லாம் உயர்ந்த சக்திகளாகக் கருதினாள்.

மனிதனுக்கு உண்டான அச்சபே கடவுளை வணங்குவதற்குக் காரணமாக அமைந்தது. எதன்மீது எல்லாம் மனிதனுக்குப் பயம் உண்டானதோ அவை அனைத்தும் தொடக்காலத்தில் கடவுளாக மாறின. பின் சிவன், திருமால், பிரமன், முருகன் என பல கடவுள்கள் தோன்றினர். அயர்களுக்கு உருவர் கொடுத்து வழிபடத் தொடங்கின.

## பக்தி மார்க்கம்

பக்தி என்பது முழுக்க முழுக்க கடவுளை நம்புவது. இறப்பிற்குப் பின்பு தான் கடவுளை அடையமுடியும் என்ற நிலையை உணர்த்துவது. ஆழ்வார்களும், நாயன்மார்களும்

இம்மார்க்கத்தைத்தான் பின்பற்றினார்கள். பிறவியின் பயனே இறைவனைக் காண்பதும் அவனைச் சென்றடைவதும் தான் என்று கருதினார்கள்.

"மன நெகிழ்ச்சி, மனஉருக்கம் எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருக்கின்றான்

என்பதை ஒவ்வொருவரும் உணர்தலே பக்தியாகும்"

தமிழ் அகராதிகள் பக்தி என்பதற்கு அன்பு என்று பொருள் தருகின்றன. எளியவர்களிடம் காட்டுவது இரக்கம். அறிவற்றயர்களிடமும், கோழைகளிடமும் காட்டுவது கருணை. எழும்பு, யானை போன்ற உயிர்களிடம் காட்டுவது காருண்யர். உறவினர்களிடம் காட்டுவது பந்தத்துவம். எஜமான் தொழிலாளிகளிடம் காட்டுவது பட்சம். குழந்தையிடம் காட்டுவது பாசம். முதலாளியிடம் காட்டுவது வீசுவாசம். கணவன் மனைவியிடம் காட்டுவது காதல்.

பக்தி என்பதன் வெளிப்படையான பொருள் கடவுள்பால் ஒவ்வொருவருக்கும் இருக்கும் பின்பு என்று சொல்லலாம். பக்தி என்பது ஒவ்வொரு சமயத்தவருக்கும் தங்களுடைய கடவுள் தான் உயர்ந்தவர் எனக் கருதத்தூண்டுவதாக இன்று மாறியீட்டது. பக்தி என்றால் என்னவென்று தெரியாமலேயே இன்று பலர் பக்திமான் எனக் காட்டிக் கொள்கின்றனர்.

## ஆன்மீகம்

ஆன்மீகம் என்பது முழுக்க முழுக்க தன்னைத்தானே உணர்ந்து கொள்வது. தன்னுள்ளே கடவுளைக் காண்பது. ஒவ்வொரு உயிரினுள்ளும் இறைத்தன்மை உள்ளது என்பதை உணர்ந்து கொள்வது. திறப்பின் மூலமே இறைவனை அடையமுடியும் என்பதை பறத்து, ஒவ்வொருவரும் இறைத்தன்மையை உணர்ந்து கொண்டால் இறைவனை உணரலாம். அதன் மூலம் மரணமில்லா பெருவாழ்வினை அடையலாம். இந்த நிலையை அடைந்தவர்கள் தான், அரவிந்தர், இராமானுஜர், ஆதிசங்கரர், விவேகானந்தர், வள்ளலார் போன்றோர்.

ஆன்மீகம், அன்பு அதன் வாயில், கருணை அதன் வரவே…தன்னைத்தான் முழுவதுமாக உணர்ந்த கொள்கின்றபோது இறைவனைத் தேடிச் செல்ல வேண்டியது இல்லை. உணரலாம். அதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். கடவுள் இருக்கிறான் என்பதைத்தான் திருமூலர், இறைமையை தன்னுள்ளேயே தன்னுள்ளே அடையலாம்.

"உள்ளத்து ஒருவனை உள்ளுறு சோதியை

உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை

உள்ளமும் தானும் உடனே இருக்கினும்

உள்ளம் அவனை உருஅறி மாதே"

பிரார்த்தனை என்பது பேரம் பேசுவது இல்லை. யாசகம் கேட்பதுமல்ல. எதையாவது எப்பொழுதும் கேட்டுக்கொண்டு இருப்பதில்லை. மாறாகக் கவனிப்பதில் இருக்கிறது.

இறைமை என்ன சொல்கிறது என்று உற்றுக்கேட்பது பிரார்த்தனை. மவுனமாக இருக்கின்றபோது, நம் மனத்தில் அத்தனைச் சப்தங்களும் அடங்கியபோது இறைமையின் உதடுகள் உச்சரிக்கின்ற ஒலிகள் நாம் காதுகளில் விழும்.

பிரார்த்தனை என்பது அன்பு செலுத்துவது, அன்பைப் பகிர்ந்து கொள்வது, தன்னிடம் அபரிமிதமாக இருக்கும் அன்பை வாரி வாரி வழங்க அது மேலும் மேலும் ஊறும் அற்புத நிகழ்வு. அந்தவகையில் இறையன்பு அவர்கள் பிரார்த்தனையை மூன்று வகையாகப் பிரித்துக் காட்டுகின்றார் (Iraiyanbu, 2016).

## முதல் நிலை

தனக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று எல்லா நேரமும் கடவுளிடம் கோரிக்கைகளை முன்வைப்பது.

## இரண்டாவது நிலை

அது இன்னும் சற்று விரிவுபடுகின்றது. உலகத்தில் இருக்கும் மற்றவர்களுக்கா… மாராக இறைமை புலன்களின் வழியாக நுழைவதற்கு வசதி செய்து கொடுத்தல். இதைப் புத்தர் கூறிய கதையொன்றின் மூலம் விளக்க முயற்சி செய்கிறார் இறையன்பு அவர்கள் நடுங்கிக்கொண்டே அவன் கீழே பார்த்தான். அங்கே இன்னொரு புலி, அவன் கீழே விழுந்தால் சாப்பிடத் தயாராக இருந்தது. அந்தக் காட்டுக் கொடியின் வேரில் அவன் தொங்கிக்கொண்டு இருந்தான்.

அந்த வேர் எப்பொழுது அருந்தாலும் கீழே விழலாம் என்ற நிலையில், இரண்டு எலிகள் அந்தக் கொடியைப் பல்லால் கடிக்க ஆரம்பித்தன. இந்தச் சூழலில் ஒரு அழகான நெல்விக்காய்ச் செடியை அவன் பார்க்க நேர்ந்தது. ஒரு கையால் கொடியைப் பிடித்துக்கொண்டு இன்னொரு கையால் ஒரு நெல்லிக்காயைப் பறித்து வாயில் போட்டுக் கொண்டான். ஆகா அது எவ்வளவு சுவையாக இருந்தது?

எந்த நிமிடமும் உயிரை இழந்துவிடலாம் என்கின்ற ஆபத்தில்கூட நெல்லிக்காயைச் அவைத்துக்கொண்டு இருப்பதைப்போலப் பன்முகத்தன்மை கொண்டது. நமது பிரார்த்தனை என்பது ஒருவகையான தப்பித்தல். எந்த நிரிடத்தினும் நமக்குக் கிடைக்கின்ற நிவாரணத்தான் நாம் மகிழ்ச்சி அடைந்துவிட முடியும். நம்மால் முடிந்ததைச் செய்து விட்டோம் என்று திருப்தியடைந்துவிட முடியும்.

நெல்விக்காபைச் சுவைப்பது எப்படி புலிகளிடமிருந்து தப்பிப்பதற்குத் தீர்வைத் தராதோ, அதைப்போல நம் பிரார்த்தனை தீர்வாக இருக்க முடியாது. காரணம் புலியைக் கண்டு படிந்து ஓடுகின்றவன் புலியால் துரத்தப்படுவான். எவன் புலியை எதிர்த்து நின்று போராடத் தயாராக இருக்கின்றானோ, அவர் பூனையாகிவிடுகின்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. தைரியத்தின் முன் புலிகூட பல நேரங்களில் நாம் எந்தப் பிரச்சனைகளைப் புவி என்று நினைக்கின்றோமோ அவை உண்மையில் பூனையைப் போல்தான் கையாளத் தகுந்தவையாக இருக்கின்றன. பிரச்சனைகளைச் சந்திக்கத் துணியின்றபோதே அவை காணாமல் போய்விடுகின்றன. நாம் பிரச்சனைகளைக் கண்டு ஓடி

நான் கடவுளை மகிழ்விக்க இதை பலி தரப்போகின்றேன் என்றார். அவன் இதைச் சொன்னதுதான் தாமதம், அங்கு இருந்த அத்தனை அழகிய பானைகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் போட்டு உடைக்க ஆரம்பித்தார்.

பதறிப்போய் ஓடிந்த குயவர் கோபத்தால் எதற்காக உடைக்கிறாய்? என இரைந்து கத்தினார். அதற்கு அவர் உனக்கு மகிழ்ச்சியாக இருக்குமே என நினைத்தேன். அதனால் தான் உடைத்தேன் என்றார் (Iraiyanbu, 2012).

நான் செய்த பானைகளை என் முன்னால் போட்டு உடைத்தால் எனக்கு மகிழ்ச்சி வருமா என்றார் மிகவும் கோபமாக. அதற்கு நீ மட்டும் இறைவன் படைத்த படைப்பை அவர் முன்னால் கொன்றால் அவருக்கு மகிழ்ச்சி கிடைக்கும் என நினைக்கிறாயா என்றார். குயவருக்கு அப்போது புரிந்தது" தன்னுடைய அறியானாயை எண்ணி வருந்தினார்.

## முதலாவது வழிபாடு

படிப்பு குறித்தது. புனிதமானவற்றைப் படிக்க வேண்டும். கேட்க வேண்டும், சிந்திக்க வேண்டும். பேச வேண்டும், எப்பொழுது நாம் சிறந்தவற்றை பட்டுமே பேசவும், படிக்கவும் செய்கின்றோமோ அப்போது நமது மனமும் அதையே சிந்திக்க ஆரம்பித்து விடுகிறது. உதாரணம். நல்லனவற்றையே நாடுவது ஓர் ஆக்கப்பூர்வமானது.

### இரண்டாவது வழிபாடு

கடவுளையோ, மகான்களையோ வழிபடுவது. வழிபடுவது என்றால் காலில் விழுவது அல்ல. அவர்களுடைய சொற்களுக்கும், சிந்தனைகளுக்கும் மதிப்புத் தந்து அவர்கள் காட்டிய நெறிகளில் செல்வது, புனித நூல்கள் கூறுகின்ற கருத்துகளை வாழ்க்கையில் அடியொற்றிச் செல்வது.

### மூன்றாவது வழிபாடு

நம் மூதாதையர்களுக்குக் கடைமையைச் செய்ய வேண்டியது. பெற்றோர்களுக்குப் பணியிடை செய்யாமல் நாம் செய்கின்ற எந்தப் பிரார்த்தனையும் நாக்குப் பலன் தராது.

### நான்காவது வழிபாடு

மனிதர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கட துறவி அவனைப் பார்த்து நகைத்துக்கொண்டே சென்றார். சில மாதங்கள் சென்று துறவி திருப்பி வரும்பொழுது அவன் ஆ என்ன புழுக்கம் என விசிறிக் கொண்டேயிருந்தான். அதற்கும் துறவி அவனைப் பார்த்து நகைத்துக் கொண்டே சென்ற கொண்டிருந்தார்"" குறவிக்குக் குளிரோ புழக்கமோ எதுவும் பாதிக்கவில்லை. அதுதான் இதிலிருந்து துறவு என்பது முற்றும் துறந்த நிலை என்பது புலனாகிறது. குறந்தநிலை என்பது ஆடைக்குறைப்பு அன்று. முற்றும் மாராக உலகத்தின்மீது நாம் கொண்டிருந்த அனைத்துப் பற்றுகளையும் துமப்பது. இறையை நம்முள் தடிகொண்டு வீட்டால் பருவமாற்றங்கள் சுட நாக்குத் தெரியாது. கொள்வதற்குத் துறவு துணைபுரிகிறது. மனதை ஒருநிலைப்படுத்திக் இல்லறத்திலிருந்து விடுபட்டு துறவு நிலை எய்தினாலும், ஞானம் பெற்ற துறவு நிலை எய்தினாலும் முற்றிலும் உலகின்மீது கொண்ட பற்றுகளை ஸ்ட்டொழிக்க வேண்டும் என்பதை இறையன்பு வலியுறுத்துகிறது. அடுத்ததாக உந்த இளைஞனிடமும் ராபி இதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவன் நான் பையை எடுக்கும்போது ஒருவேளை எனக்குள் ஒரு கெட்ட எண்ணம் ஏற்படுமேயானால் அதை நானே வைத்துக்கொள்வேன், மாறாக இறையை என்னை ஆசீர்வதித்தால், அந்த நொடியில் இறைமை என்னை முழுவதுமாக ஆட்கொண்டால், நிச்சயம் நான் அதை அபகரித்துக் கொள்ளாமல் உரியவர்களிடம் சேர்க்க முயற்சி செய்வேன் என்றான். அதைக் கேட்ட ராபி நீ ஒரு உண்மையான ஞானி என்றார்.

நிறைய நேரங்களில் உலகத்திற்காக நாம் ஒன்றைப் பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் வெளியே ஒன்றைப் பேசும்போதெல்லாம் நம் உள்மனது வேறொரு மாதிரி சிந்தித்துக் கொண்டிருக்கிறது. நாம் ஆசைகளை வைத்துக்கொண்டு வேண்டாம் என்று சொல்லுகிறோம். அவற்றை ஒத்துக் கொள்கின்றபோது அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்கிற எண்ணம் ஏற்படுகிறது. போலித்தனமாகவே இருக்கிறது. இயற்றையும் மீரி நாம் வாழ்கின்ற யாழ்க்கை

## முடிவுரை

உண்மையாகச் அனைத்துப் பாகுபாடுகளையும் தகர்க்கின்றபோது ஜோதி தென்படுகிறது. வள்ளலனார் உடுத்திய உடையும் வெண்மை. வெண்மை. வள்ளலார் பாடுபட்டது சமரசத்திற்காக. இணைக்கிறபோது சமரசம் ஏற்படுகிறது. அவரை வழிநடத்திய ஜோதியும் அனைத்து மனங்களையும் அந்த சமரசத்தை அடையதந்த மனதிலே தூய்மை வேண்டும். மனத்தூய்மை அடைய ஜோதியின் வெண்மை உதவும். எல்லா மனங்களும் தூய்மை அடையும்போது சமரசம் என்கின்ற அந்த வெண்மை கூடும். வெண்மை அனைத்து மனங்களையும் உள்ளடக்கிய நிறம். இப்படி, துறவிகள், மகான்கள், ஆன்ரீகத் தலைவர்கள், விவேகானந்தர், வள்ளுவர், வள்ளலார் என பலரின் இறையியல் சிந்தனைகளை உள்வாங்கி, வாழ்க்கை நெறிகளோடு இயைத்துக் காட்டி, அவற்றைப் பின்பற்றுவதற்கு எளிதான வழிமுறைகளை வெ. இறையன்பு காட்டுவதை, பல நிலைகளில் வெளிப்படுத்த முடியும். இல்லறத்தில் இருந்துகொண்டு இயல்பான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டே இறைமையை உணர்ந்து வாழமுடியும்.

## References

Iraiyanbu, V. (2012) Chinna Chinna Velichangal, New century Book house, Chennai, India

Iraiyanbu, V. (2016) Vazhkaiye Oru Vazhipadu, Vijaya Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License